**MCOP No.52/2021**

**தேதி- 18.10.2024**

**பெயர் : திரு. கன்னியப்பன், த/பெ. ராமசாமி**

**ம.சா.1** இன்று மீண்டும் அழைக்கப்பட்டு 2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

என்னுடைய மகன் அன்பு என்பவரின் வேலை சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் அவ்வாறான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மகனின் வருமானம் சம்மந்தமான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் நான் பார்க்கவில்லை, என்னுடைய மனைவி பார்த்துள்ளார். காவல் நிலையத்தில் புகார் யார் கொடுத்தார் என்றால் என்னுடைய மனைவி கொடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னுடைய மனைவி உஷாராணி என்பவர் தான் புகார் கொடுத்தார். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் தர்மராஜன் என்பவர் தகவல் சொல்லி தான் என்னுடைய மனைவி விபத்தை கேள்விப்பட்டதாகவும் என்னுடைய மனைவி தான் எனக்கு தகவல் சொன்னதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை ஆவணம் என் மனைவி விபத்தை கேள்விப்பட்டு கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என் மகன் அன்புவிற்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். விபத்தன்று என்னுடைய மகன் தலைக்கவசம் அணியவில்லை என்றால் அதை பற்றி

எனக்கு தெரியாது. என் மகன் அதிவேகமாக வந்து திரும்பும் போது லாரியில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநருக்கு கனரக வாகனங்களை இயக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

ம.சா.ஆ.12 மாதிரி வரைபடத்தின் படி என்னுடைய மகன் மீது தான் தவறு என்று தெரிய வருகிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்த வரை காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. மேலும் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ K. Sujatha,
Additional District Judge.
Arani.